மாணவர் கீதமஞ்சரி

கதையும் பாட்டும்.

போடிநாயக்கனூர் தேவாங்கர் வித்தியாசாலைத்
தலைமை உபாத்தியாயர்
எஸ். பழநியப்பா அவர்கள்
இயற்றியது.

புஸ்தகவியாபாரம்
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்.
மதுரை & சென்னை.
ரிஜிஸ்தர் செய்தது]   1931.   [விலை அணா 4.

மாணவர் இதமஞ்சரி.

கதையும் பாட்டும்.

பாலபோதன முறைக்கேற்ப எளிய நடையில்
அமைக்கப்பட்டது.

போடிநாயக்கனூர் தேவாங்கர் வித்தியாசாலைத்
தலைமை உபாத்தியாயர்
எஸ். பழநியப்பா அவர்கள்
இயற்றியது.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புக்செல்லர் & பப்ளிஷர், வடக்குச் சித்திரை வீதி,
மதுரை.

ரிஜிஸ்தர் செய்தது] 1931. [விலை அணா 4.

PRINTED AT
The Excelsior Press,
MADURA.

முகவுரை.

"மாணவர் கீதமஞ்சரி" என்னும் இச்சிறு பாட புத்தகத்தை நான் வாசித்து வரும்போது நான் சிறுபிள்ளையில் பள்ளிக்கூடத்தில் படித்துவந்த காலத்தில் ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்து வந்த முறைகளும் மாணவர்கள் ஆசிரியரிடத்துக் கல்வி கற்றுவந்த முறைகளும் ஒன்றன்பின் ஒன்றாக என் ஞாபகத்திற்கு வந்தன. ஏனெனில், இந்நூல் மாதா பிதா குரு தெய்வம் என்கிற இவர்களுக்குப் பிள்ளைகள் பாலப்பருவத்தில் செலுத்திவரக் கடமைப்பட்டிருக்கிற வழிபாடுகளையும் அவர்கள் கல்வி கற்றுக்கொள்ளவேண்டிய முறைப்பாடுகளையும் பின்னர் அவர்கள் மனித வாழ்க்கையில் கௌரவமாக நடந்து கொள்ளவேண்டிய கடப்பாடுகளையும் "இல்லாத ஒன்றினைக் கற்பித்துக் கூறாமல்" உள்ளது உள்ளவாறே காக்கை கிளி ஓநாய் ஆடு முதலிய பறவை, மிருகங்களின் சுபாவகுண உதாரணங்களோடு இயற்கை நயம்பெருகி இன்னிசைவிரவி ஆழ்ந்த கருத்துக்களைத் தமதகத்தடக்கிய சிறுச்சிறு தெள்ளிய சொற்களில் அமைந்து இளஞ்சிறார்களும் உணர்ந்து பயனடையுமாறு இலகுவாக எடுத்தியம்பிச் செல்லுகின்ற உயர்ந்த பல இசைப்பாக்களையும் சம்பாஷணைக் கதைப் பாக்களையும் பாலபோதனமுறைக் கேற்றவாறு இயற்றியும் திரட்டியும் இருக்கின்றபடியால் என்க. ஆகவே இதனை ஆக்கியும்திரட்டியும்அளித்தஆசிரியர்போடிநாயக்கனூர்தேவாங்கர் வித்தியாசாலைத் தலைமை உபாத்தியாயர் திருவாளர். எஸ். பழநியப்பா அவர்களை இற்றைக் காலத்தில் கல்வி கற்றுவரும் மாணவர்களும் கற்பித்துவரும் ஆசிரியர்களும் பாராட்டக் கடமைபூண்டிருக்கின்றனர். இதனைப் பாடமாயேற்று ஆதரிக்கும் வித்தியாபிமானிகளுக்கு ஆசிரியரும் நன்றிசெலுத்தக் கடப்பா டுடையவ ராவர்.

இங்ஙனம்,

நா. கிருஷ்ணசாமி நாயுடு,

தமிழ்வித்வான்,

மதுரை.

பொருளடக்கம்.



வாழ்க நம் அரசர்! வாழ்க நம் அரசி!
வாழ்க நற் செங்கோல்! வையகம் வாழ்கவே!

மாணவர் கித மஞ்சரி.

காப்பு.

ஆதியந்த மின்றியே அகிலமெங்குந் தங்கிய
ஜோதியான பரம்பொருள் ஜொலிக்கும் வேதநாயகன்
பாதபத்மந் தனைக்கொண்டு பள்ளிச்சிறுவர் நாடோறும்
ஓதியறியக் கிதங்கள் ஓகைகொண் டெழுதுவேன்.

தோத்திரப் பாடல்கள்.

பொன்னார் மேனியனே என்ற மெட்டு.

1. அங்கிங் கெனாதபடி எங்குமொரே முகமாய்
தங்கும் பரம்பொருளாந் தயாபர மூர்த்தியேநீ
வங்க மியக்குமொரு மீகாமன் றனைப்போல்
இங்கெவையும் நடத்தும் இன்ப சாகர ரூத்திரனே.

2. அண்டமெல்லாங் கடந்து நின்றதனி முதலே
எண்டிசை தேவரெல்லா மேத்தும் ஜகஜ்யோதியே
தொண்டர் தொண்டனாகத் துலங்கும்பெம்மானே யுனை
வண்டமிழ்ப் பாவாலே நிதம் வாழ்த்தி வணங்குவமே.

கணபதி தோத்திரம்.

கண்ணிகள்.

1. ஆத்திநன் மலரெத்து
ஆத்தங்கரை காத்திருக்கும்
மூர்த்தியான பிள்ளையார்க்கு
சாத்தியே வணங்கிடுவேன்.

2. கொன்றை நன் மலரெடுத்து
நன்றாக நான் தொடுத்து
ஒன்றாக வமர்ந்திருக்கும்
முதல்வனுக் கதைச் சாத்திடுவேன்.

3. திங்களொடு வெள்ளிகளில்
ஐங்கரற்கு நீர்வார்த்து
அங்கமெலாம் நீறுபூசி
பங்கமிலா மலர் சாத்தி,

4. தோத்திரங்கள் பலசொல்லி
தோப்புக் கர்ணம் நான்போட்டு
காத்திருந்து குட்டுக்குட்டி
கன்னத்தறைந்து வணங்கிடுவேன்.

சுத்தப்பிர்ம பராபரராம் என்ற மெட்டு.

சுவாமி கஜவதன நமோ நமோ—திவ்ய
சுக்லாம் பரதா நமோ நமோ
காமரூபதா நமோ நமோ—தைவ
கங்காதர சுத நமோ நமோ
பாரலம் போதர நமோ நமோ—வால
பாம்பசமேதா நமோ நமோ
சாரச சரண நமோ நமோ—குக

ஷண்முகாக்ரஜா நமோ நமோ
மூஷிக வாகன நமோ நமோ—திட
மோனமர்ந்தாத்தா நமோ நமோ
போஷணகருணா நமோ நமோ—முக்ய
புண்ய சொரூபா நமோ நமோ
இந்த்ராதி வந்தித நமோ நமோ—நாக
எக்ஞோப வீதா நமோ நமோ
சந்த்ர கலாதர நமோ நமோ—பத
சத்ஜன பூஜித நமோ நமோ
காஞ்சன சன்னிய நமோ நமோ—மகா
காயகணபதே நமோ நமோ
சாஞ்சல்ய மோசன நமோ நமோ—வி
சாலத்ரி யம்பக நமோ நமோ
சாமர கர்ண நமோ நமோ—பார
சதுர்புஜ மந்த்ர நமோ நமோ
வாமன ரூபா நமோ நமோ—சித்ர
மாலவி பூஷித நமோ நமோ
பாப விமோசன நமோ நமோ—உத்ர
பாசாங்குசதர நமோ நமோ
ஆபத் பாந்தவா நமோ நமோ—மூலா
தாரக் கணபதே நமோ நமோ.

---

2. சரஸ்வதி தோத்திரம்.

கண்ணிகள்.

1. வெள்ளை நல்ல மலரெடுத்து
வேகமாக நான் தொடுத்து

2. சாணங் கொண்டு தரைமெழுகி
சரியாய்க் கோலம் பலவிட்டு

3. புஸ்தகம் ஒழுங்காய் அடுக்கிவைத்து
புனிதவஸ்திரம் நான் தரித்து

4. கல்வித்தேவதை கலைமகளைக்
கருத்தாய் மனத்தில் உருக்கொண்டு

5. ஆரம் போட்டு அலங்கரித்து
ஆனதோர் தேங்காய் தானுடைத்து

6. பாலும் பழமும் நான் படைத்து
பாங்காய் வெற்றிலை பாக்கு வைத்து

7. வத்தி கற்பூரம் தீபமிட்டு
வாணி நாமம் பல சொல்லி

8. எத்தி வணங்கித் தொழுதாலே
சாத்திரக்கலைபல வருமே-தான்

உந்தனைச் சும்மா விடுவேனோ என்ற மெட்டு.

1. புத்தகத்தேவி கீர்வாணி
புலவர்கள் நாவுறை கலைவாணி
வித்தகத்தேவி விருப்பாக்ஷி
விரும்பியே கூவினேனருள் தாநீ.

2. கலைமகளே திருநாமகளே
கயத்திடைப் பூக்கும் மலர்மகளே
பலகலையாயுள வென்னம்மே
பணிந்தனன் பதமலர் நான்தினமே

3. வெள்ளைக்கலையாய் வெண்மனத்தாய்
வெண்டாமரைதனில் வீற்றிருப்பாய்
பள்ளிப்பாலர்கள் மனத்திடையே
பள்ளிகொண்டவர்க்கருள் சுரந்திடுவாய்.

4. நான்முகன் நாவிலுறைபவளே
நாட்டிற்கலை மழை கொழிப்பவளே
தேன்மலர் செறிநற் சரஸ்வதியே
தேடினேன் வரமருளித்ததியே.





ராஜவாழ்த்துப் பாடல்கள்.

கண்ணிகள்.

1. சீமைநாட்டிற் பிறந்து
சீராய் டில்லியில் வந்து

2. அம்மை நம்மேரியோடு
அழகாய்ப் பட்டங்கொண்டு

3. குறைகளெல்லா மறிந்து
குடிகட்கு நலம் புரிந்து

4. புவனமெல்லாம் ஆட்சி
புரியும் ஜார்ஜின் மாட்சி

5. கூறிக் களித்துத் தினமே
கும்பிட்டு வருவோம் நாமே

ஆங்கில அரசியலின் நன்மைகள்.

1. ராஜாவே ராஜாவே
எங்களை ஆளும் நல்ராஜாவே

2. நாங்களும் கல்விபெற
நலம்பல செய்திடும் ராஜாவே

3. ஆஸ்பத்திரி நிருமித்து
அன்னைபோல் காக்கும் ராஜாவே

4. தந்தி தபால் உண்டாக்கி
தந்தை போலாளும் நல்ராஜாவே

5. போலீசுக் காவல்வைத்து
பொற்புடனாட்சி செய்ராஜாவே

6. இணையில்லா நன்மை பல
இணங்கிச் செய்தாளும் ராஜாவே

7. இங்கிலாந்தில் இருந்துகொண்டு
எங்களைக் காத்திடும் ராஜாவே

8. தங்கம்போல் குணம் படைத்து
தனியரசாளும் நல் ராஜாவே

9. அன்னையாம் மேரியுடன்
அனவரதமும் வாழ்ந்திடவே

10. கீர்த்தியுடன் புகழ் பெறவே
கீர்த்தியாய் நாளும் வாழ்ந்திடவே.

கல்லார்க்குங் கற்றவர்க்கும் என்ற மெட்டு.

1. அலையோங்கும் கடல்சூழும் அவனியாளு மன்னன்
அனைத்துயிருங் காத்துவரும் அருமைஜார்ஜு மன்னன்

2. கலையெல்லாங் கற்றறிந்த கருணையோங்கு மன்னன்
கற்றவரை இத்தரையில் களிப்பிக்கும் மன்னன்

3. உலகமெல்லாம் போற்றத் தனி யரசுபுரி மன்னன்
உத்தமியாம் மேரிராணியுகக்கும் ஜார்ஜு மன்னன்

4. பலநலங்கள் சொரியுமைக்யக் கொடியுடைய மன்னன்
பயமொழித்துப் பலநாளும் வாழி வாழி வாழி.

"அலைசேர் கடல் சூழ்" என்ற நோட்டு மெட்டு.

உலகமெங்கும் புகழோங்கும்
உயர்தவ குணமிகு மன்னவராம்
கலைகள் பலவும் கற்றவராம்
கதிரவன் மறையா நாட்டவராம்

அலகில் பல நாட்டரசர்
அடிபணிந்திடு முடிவேந்தர்

எங்கள் ஜார்ஜு மகராஜர்
எங்கும் ஜெயம்பெறு மகிபாலர்
இங்கிலாந்தி னுறை பாலர்
இங்கிதமேரி மகிழ் நேசர்

மங்களமாய் எந்நாளும்
மகிமை பெற்று வாழ்ந்திடவே. (உலக)

தேசீய கீதங்கள்.

1. நாங்கள் பிறந்த தமிழ்நாடு
நாட்டிற் சிறந்த தமிழ்நாடு

2. மலை செறிந்த தமிழ் நாடு
மலர்கள் மலிந்த தமிழ்நாடு

3. கல்வி நிறைந்த தமிழ் நாடு
காடு செழிந்த தமிழ் நாடு

4. தர்மமுடைய தமிழ் நாடு
தங்கம்விளையும் தமிழ் நாடு

5. நாங்கள் போற்றும் தமிழ்நாடு
நாளும் துதிக்க மனநாடு.

இங்கிலீஷ் நோட்டு.

1. மங்கள மலியுந் திருநாடு—புகழ்
தங்கிடு மெங்கள் தமிழ் நாடு

2. செந்தமிழ் பிறந்த திரு நாடு—நற்
சுந்தரக் காட்சித் தரு நாடு

3. சேரர்களாண்ட திரு நாடு—உயர்
மாறன தாட்சிப் புகழ் நாடு

4. சோழர்களாட்சி புரி நாடு—மலை
வேழஞ் செறிந்து விரி நாடு

5. வேங்கடம் வடக்காம் தமிழ் நாடு—கலை
யோங்கிடு மெங்கள் வளநாடு

6. சேதுவமைந்த திரு நாடு—அற
மா குவளர் செய் பொன்னாடு

7. "கம்பன் பிறந்த தமிழ் நாடு"—நல்
லும்ப ருறையுந் திரு நாடு

8. பார்புகழ் பெற்ற தமிழ் நாடு—எம்
ஜார்ஜரசாளும் திரு நாடு

9. சாத்திரக்கலை சேர் தமிழ் நாடு—இதைத்
தோத்திரஞ் செய்தே மனநாடு.

தமிழ்.

1. வாழ்க வாழ்கவே தினம் வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே.

2. அன்னை வாழ்கவே தமி ழரசி வாழ்கவே
எந்நாளு மெந்த னாவி லுறையு மன்னைவாழ்கவே.

3. தந்தை தாயொடு கிளை பந்து சுற்றமும்
முந்தையோரும் போற்றி வளர்த்த அன்னைவாழ்கவே.

4. தேவர் தேவனும் புவி மூவர் வேந்தனும்
காவலன் பயந்த பாவை கன்னி வாழ்கவே.

5. பொதிய மாமலை தனில் போந்த முனிவனும்
மதியுடைய சீடர் மதித்த மங்கை வாழ்கவே.

6. மதுரைப் பதியினில் பல மன்னர் மன்னரும்
மதுர கவிகள் போற்றி வளர்த்த மாதா வாழ்கவே.

7. கம்பன் நாவினில் கவிக் கூத்தன் நாவினில்
செம்மை யரசு புரிந்த வெங்கள் செல்வி வாழ்கவே.

8. அமுத வாக்குடை திரு அவ்வைப் பாட்டியின்
அரியநாவி லுறைந்த தமி ழன்னை வாழ்கவே.

9. இனிய முத்தமிழ் இய லிசை நாடகம்
எனவே தனி யாசு புரிந்த எந்தாய் வாழ்கவே.

10. உலகில் தோன்றிய சுக உயிர்ப்பிராணிகள்
பலவும் போற்றக் களிக்கும் எங்கள் பாவை வாழ்கவே.

11. இனிமை யென்னவே ஒரு தனிமை யென்னவே
முனிவ ரெல்லாம துதிக்கும் தமிழ் முதல்வி வாழ்கவே.

12. பாரெல்லாம் புகழ் ஜெய பாரகவி ஞனும்
பாரதிதன் னுவில் வாழும் பாவை வாழ்கவே.

சின்னஞ்சிறு பாடல்கள்.

மாமா தந்த துட்டு
மனதிற் கிசைந்த லட்டு
வாங்கித் தின்று விட்டு
வழியி லேப்ப மிட்டு
உன் தாயாரையே கூவி
உடனே ஓடு தாவி.

கன்னங் கரிய குருவி
காலையில் கூவுங் குருவி
சின்னஞ் சிறிய குருவி
சிறகை யாட்டுங் குருவி
கிச்சுக்கிச் செனுங் குருவி
கரிச்சா னென்னுங் குருவி

மஞ்சள் வெயில் காய்ந்ததாம்
மழை விழுந்து ஓய்ந்ததாம்
ஈர மெங்கும் காணுதாம்

ஈசல் புற்றில் தோணுதாம்
காக்கை பறந்து கத்துதாம்
கருத்தாய்ப் புற்றைச் சுத்துதாம்
ஓடிப்பறக்கும் ஈசலை
ஓடி ஓடிக் கொத்துதாம்
பாம் பொன்று வந்திட
பறவை யோடிப் போனதாம்.

கணக்குப் பாட்டு.

ஒன்றுடனே ஒன்றைச் சேர்த்தால்
உயர்வுடனே இரண்டாகும்
இரண்டுடனே ஒன்றைச் சேர்த்தால்
இணையில்லாத மூன்றாகும்
மூன்றுடனே ஒன்று சேர்த்தால்
முடிவில்லாத நான்காகும்
நான்குடனே ஒன்றைக் கூட்ட
நன்னயமாய் ஐந்தாகும்
ஐந்துடனே ஒன்றைச் சேர்க்கின்
கைம்மேலே ஆறாகும்
ஆறுடனே ஒன்றைச் சேர்த்தால்
அழகாகவே ஏழாகும்
ஏழுடனே ஒன் றடுத்தால்
எழிலுடனே எட்டாகும்
எட்டுடனே ஒன்று கூட்டின்
மட்டில்லாத ஒன்பதாமே
ஒன்பதோடு ஒன்று சேர்க்கில்
உயர்ந்த எண்ணும் பத்தாகும்
பத்தல்லோ பத்தல்லோ
இருகைவிரல்கள் பத்தல்லோ.



கிள்ளையோடு பேசல்.

கிளியே கிளியே எங்கே போனுய்?
பழுத்த பழத்தைத் தின்னப்போனேன்

என்ன பழம்?
கொய்யாப் பழம்
என்ன கொய்யா?
பன்னீர்க் கொய்யா
என்ன பன்னீர்?
ரோஜாப் பன்னீர்
என்ன ரோஜா?
காட்டு ரோஜா
என்ன காடு?
மாங்காடு
என்ன மா?
பிர்மா
என்ன பிர்மா?
நான்குமுகப்பிர்மா

என்ன நான்கு?
வேதம் நான்கு
என்ன வேதம்?
கடவுள் வேதம்
என்ன கடவுள்?
பரம்பொருள் கடவுள்
என்ன பரம்பொருள்?
முத்தொழில் நடத்தும் முதல்வன் பரம்பொருள்
அத்தகையோரே நமது தெய்வம்
அவரைத் தினம் தினம் வணங்கவேண்டும்.

பைங்கிளிப் பாடல்.

"பாராயோ என்னைமுகம்" என்றமெட்டு.

1. பச்சைப் பசுங்கிளியே பவளவாய் நற்கிளியே
இச்சைதரும்படியாய் என்னுடனே பேசுவாயே.

2. சொல்லிக்கொடுக்கின்ற சொற்களை நீவிடாமல்
சொல்லுகின்றவித்தைதனை எங்கேபோய்க்கற்றுக்கொண்டாய்.

3. பாலும் பழமெல்லாம் பாங்காயருந்துவதால்
சிலமுள்ள சாகபக்ஷி யென்றே இயம்பிடுவார்.

4. கருப்பொடு சிவப்புவர்ணம் கலந்தவுந்தன் மூக்கினையே
விருப்பமுடன் பாலரெல்லாம் வேடிக்கை பார்ப்பாரே

5. வளைந்தவொரு மூக்கினலே வாழைமுதற் பழங்களையே
சளைக்காமல் தின்பதற்கே சாமர்த்தியமுண்டல்லவோ.

6. காட்டில்திரிகின்ற உன்னைக் கண்ணிவைத்துப் பிடித்து
கூட்டி லடைத்தனல் குறையுண்டோ கூறிடுவாய்.



திசையறிதல்.

1. சுந்தரமே சுந்தரமே
சூரியனைப்பார் சுந்தரமே
அந்தமுள்ள உந்தன் முகம்
அமைந்ததிசை கிழக்காகும்.

2. உந்தனது முதுகுப்புறம்
உள்ளதிசை மேற்காகும்.
அந்தியிலே செங்கதிரோன்
அமைவது மத்திசையாமே.

3. இடதுகரப் புறத்தினிலே
இருக்கும்திசை வடக்காமே.
வடதுருவ நக்ஷத்திரம்
வாய்ந்ததிசை இதுவாமே.

4. வலதுகரப் புறத்தினிலே
வாய்க்கும்திசை தெற்காமே.
இலங்கைத் தீவமைந்திருக்கும்
இயமன்திக் கதுவாகும்.

ஜந்துக்களின் தொனி.

தானனுன ஞனன தானனுன ஞனன

1. காலையினில் கொக்கரக்கோ வெனவே சேவலும்
கருத்தாகக் கூவிடக் கண்விழிப்பர் யாவரும்

2. சோலையி லமர்ந்திடும் சுந்தரமாங் குயில்
கூ கூவென்று கூவிடும் குரல் கேட்பீர் தோழரே

3. மனிதரைச் சுமக்கும் மட்டப் புரவியும்
களைத்தோடுங் களிப்பைக் கண்டிடும் பாலரே


4. மனையினைக் காத்திடும் மாண்புள்ள நாயுமே
குரைத்திடக் கள்வனும் கூறுதே யோடுவான்

5. எலிபிடிக்கும் பூனை தான் ஏணியின்மே லேறியே
சலிக்காம லுறுமும் சந்தடிகேட் டோடுமே

6. வர்ணமயிலதும் வனப்புள்ள தோகையோ
டன்ன விதமாக ஆடிக் கொண்டகலுமே

7. காட்டிலே சிங்கத்தின் கர்ஜனைகேட் டெல்லாம்
ஓட்டமா யோடியே யொளித்துக்கொள்ளும் பாருமே

8. கிரியைக்கண் டஞ்சிய நாகம் படங்கொண்டுமே
சிறிவிழுங் காட்சியால் சிறுவர் பயங் கொள்வரே.



ரெயில்வண்டி.

1. காலுமின்றியே கரமுமின்றியே
   கடுமையாகவே நடப்பான்பாருமே.
2. பாலுமருந்தான் பழமுமருந்தான்
   பசித்தால்கரியைத்தின்றே ஜலங்குடிப்பான்.
3. கண்களின்றியே காததூரமும்
   களைத்திடாமலே சுற்றி ஓடிவருவான்.
4. கிச்சிடுவான் மூச்சுவிடுவான்
   பேசிடாமலே திரிந்து காலங்கழிப்பான்.
5. சட்டையின்றியே போர்வையின்றியே
   சளைக்காமல்வெயில்பனிமழையில்நனைவான்.
6. குடையுமில்லாமல் செருப்புமில்லாமல்
   குடுகுடென்னவே இரவில்கூசாதோடுவான்.
7. பொறுமையாகவே பெரியசுமைகளைப்
   பெருமையாகவே சுமப்பான்பாருமே.

தாய்செய் நன்றி.

1. தாயாரைப்போல் தயவாயுள்ளவர்
தரணியிலாரே சொல்
ஓயாமலுன்னைச் சீராட்டிப் பாராட்டிய (தாயா)

2. பத்துமாதம் சுமந்தே வயிற்றில்
பலவித மருந்துண்டு
இத்தரை மீதினி லுந்தனைப்பெற்ற (தாயா)

3. கட்டிலின்மேலும் தொட்டிலின்மேலும்
கிடத்தியே தாலாட்டி
பட்டினி விரதம் பலவிருந்தோம்பிய (தாயா)

4. ஈயுமெறும்பு மணிகிடாமல்
இதமாய்க் காத்துன்னை
பையலென்றே பரிவா யெடுத்த (தாயா)

5. ஊணும் உறக்கமும் உடல்நலம் பலவும்
உனக்கே யர்ப்பணித்து
பேணிவளர்த்தே பெரியோனுக்கிய (தாயா)

6. தன்னைப்பாரா துன்னைக் கண்டு
தக்ஷணம் மனம் நொந்து
அன்னைத் திரவே அறம்பல புரிந்த (தாயா)

7. சான்றோ னென்றே உலகோர் பலரும்
சாற்றுவதனை யறிந்து
ஈன்ற போதிலும் பெரிதே யுகக்கும் (தாயா)

தந்தைசெய் நன்றி.

தலையே நீ வணங்காய் என்ற மெட்டு.

1. பிதாவே கல்வித் தெய்வம்—நம்மைப்
பெற்ற நாளி லிருந்து,
பேணுங் கல்வி பெரிதும் தந்து
பிரியமாய்க் காக்குந் தெய்வம் (பி)

2. தவறே நாம் புரிந்தால்—நம்மைத்
தண்டித் தறம் புகட்டி
தன்மை யாகப் புத்தி சொல்லித்
தாங்கி வளர்க்குந் தெய்வம் (பி)


3. மிகவே நாம் படித்தால்—நம்மை
மெச்சிக் கொண்டாடிக் கொண்டு
வேண தெல்லாம் அன்பாய் ஈந்து
வேண்டிப் பாராட்டுந் தெய்வம் (பி)

4. எழுத்தும் எண்ணும் இவை—நமக்
கே இரு கண்க ளென்றே
இரவும் பகலும் கவலை யுடனே
ஏற்றிப் பாராட்டுந் தெய்வம் (பி)

5. சபையில் நாமிருந்து—பிர
சங்கம் புரிவதற்கும்
தக்க நற்ச மர்த்த ராகத்
தான் முயற்சிக்குந் தெய்வம் (பி)

6. உடலே வளர்வது போல்—கல்வி
உணர்வும் தான் வளர
ஓயா தென்றும் பாடு பட்டே
ஊக்கி வளர்க்கும் தெய்வம் (பி)

7. உதவி மறவாமலே—மிக்க
ஊக்கமுடன் படித்தும்
உத்த மமா ணவ ரென்றே
உற்ற நலம் பெறுவோம் (பி)



நக்ஷத்திரம்.

இங்கிலீஷ் நோட்.

1. உலகத்தின் மேல் உன்னதமாய்
ஒப்பற்றதோர் வைரம்போல்
மினுக்கிடும் விண் மீனினமே
மிகவே யாச்சர்ய மடைவேன் யான் (உல)

2. வெங்கதிரோன் மறைந்ததன் பின்
செம்மையற்றி போனதன் பின்
சிறுவெளிச்சம் காட்டியே நீ
இரவெல்லாம் மினுக்கிடுவாய் (உல)

3. மதியொளிர்த நாட்களிலே
கதியைக் காட்டுந் தோழனே நீ
பிரயாணிகளுக் குன்னாலே
பிரயோஜனம் பல வுண்டாமே (உல)



காகம்.

இந்த மாம்பழம் இனிய ஜாதியாம் என்ற மெட்டு.

1. கரிய காக்கையின் அரிய குணங்களைச்
சிறுவரறியவே அறைகுவேனே யான்
2. காலை நேரத்தில் கருத்தாய் விழித்துமே
மேலே பறந்துபோ யிரையைத் தேடுமே
3. எங்கேயாகிலும் இரையைக் கண்டிடில்
சங்கையின்றித்தன் இனத்தைக் கூவிடும்
4. தினமும் மாலையில் தீர்த்த மாடுதல்
சிறந்த காக்கையின் செய்கை யாகுமே
5. அசுத்தம் போக்குதல் அதன்இயற்கை யாகையால்
அனைவருமிதை ஆகாயத் தோட்டியென்பரே
6. இந்தியாவிலும் இலங்கைத் தீவிலும்
இருக்கும் காக்கைகள் இரண்டுவித மாமே
7. சாம்பல் நிறமாக இருக்குமோர் வகை
சுத்தக்கருமையா யிருப்பதோர் வகை
8. சாய்ந்த பார்வையாய்ப் பார்ப்பதாயினும்
சாகசத்திலே காக்கை தேர்ந்த தாகுமே.

நந்தவனப் பாட்டு.

தனதனனு தனதனனு.

1. மலரெடுப்போம் மாலை தொடுப்போம்
மாங்குயில் வாழும் மரத்தோட்ட மடுப்போம் (மலர்)

2. பலநிறமாய் மலர்ந்திருக்கும்
பார்ப்பவர் கண்களுக் கானந்த மளிக்கும் (மலர்)

3. கொடி கொடியாய்ப் படர்ந்திருக்கும்
கொடி மல்லிகையென வெளுத்திருக்கும் (மலர்)

4. அடுக்கடுக்கா யிதழ் அமைந்திருக்கும்
அடுக்குமல்லிகை யெழில் மிகுந்திருக்கும் (மலர்)

5. ஸ்வர்ண மயமாய் மலர்ந்திருக்கும்
சூரியகாந்தி அழ கமைந்திருக்கும் (மலர்)

6. அந்தியிலே மலரும் வெள்ளை
அந்தி மந்தாரை யங்கு சிறந்திருக்கும் (மலர்)

7. பவழ மென்னவே சிவந்த காம்புடை
பவழ மல்லிகை கொத்தா யலர்திருக்கும் (மலர்)

8. புஷ்பராஜா இஷ்ட ரோஜா
பூத்துப் பொலியுமுள் புதர்களிலே (மலர்)

9. அந்த மிகுந்த சுகந்த முடைய
சுந்தர ரோஜா மலர் பலவிதமாம் (மலர்)

10. மனமதுமிக்க மகிழ்ச்சி அடுக்கும்
மகிழமலரதி வாசங் கொடுக்கும் (மலர்)

மழை.

1. மாந்த ரெல்லாம் மனங்களிக்க
மானிலப் பூண்டெல்லாஞ் செழிக்க
பாய்ந்து வரும்நதி பிரவகிக்க
பாரினில் விழுவாய் ஓ மழையே

2. உழவும் விதைப்பும் உன்னாலே
உண்ப தடுப்பதும் உன்னாலே
விளைவும் அறுப்பும் உன்னாலே
விலங்கினம் வாழ்வது முன்னாலே

3. காயும் பழமு முன்னாலே
கருப்பு நீங்குவ துன்னாலே
கோயிற் பூசை யுன்னாலே
குடிகள் சிறப்பது முன்னாலே

4. ஆறு குளங்கள் தானிறைய
அலைகடல் ஜலத்தைத் தானருந்தி
கார்மே மாகப் பூமியிலே
கனக்கப் பொழிவாய் ஓ மழையே.

மழைக் குறிகள்.

வெள்ளம் வரவுள்ள குறியல்லோ காணுது—பண்ணை
மீதிலன்றில் பேடதோன்றி ஓலம் போடுது
வள்ளமதி சூழ்ந்துபரி வேடம் போடுது—கம்பின்
வாயலற ஞெண்டுபுடை வாயின் மூடுது
தள்ளரிய மேகமு முடாரம் போடுது—தெற்குத்
தாவியவெண் பூச்சிகோடு மேவி யோடுது
தெள்ளுதமிழ்க் காசைநகர் வள்ளலாம் ராசையன்-பண்ணைச்
சீர்வளர மழை பெய்யும் பாரும் பள்ளீரே.


"ஆற்றுவெள்ளம் நாளைவரத் தோற்றுதே குறி—மலை
யாள மின்னல் ஈழமின்னல் சூழ மின்னுது.
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குது—கேணி
நீர்ப்படும் சொறித்தவளை கூப்பிடுகுது.
சேற்றுநண்டு சேற்றைக்கிள்ளி ஏற்றடைக்குது—மழை
தேடிஒரு கோடி வானம் பாடி ஆடுது.
போற்று திரு மாலழகர் ஏற்றமாம்பண்ணைச்—சேரி
புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக்கொள்ளுமே."

கதாகிருதிகள்.

கண்ணப்பன்.

நொண்டிச் சிந்து.

கண்ணப்ப னென்றோர் சிறுவன்—தந்தை
கண்டித்தார் மரமேற வேண்டாமென்று
சொல்லியுங் கேட்கவில்லை—அவன்
ஒருவருங் காணுதோர் தினத்தில்
பெரிய மரமொன்றில்—கூசா
தேறியே உச்சிக்குப் போய்விட்டான்
காற்றென் றடித்திடவே—மாம்
வேரோடடியிலே வீழ்ந்திடவே
கிளையிலிருந்த பையன்—பாபம்
கீழேவிழுந்து காலொடிபட்டதே
ஆதலால் சிறுவர்களே—நாங்கள்
ஆனமட்டும் பெரியோர் சொற்கேட்போமே
தட்டினால் வருங்கேடு—தாய்
தந்தைகள் சொல்வதே பெருநீதி
என்பதை மனதிற்கொண்டு—அவர்கள்
இஷ்டப்படியே நடந்திடுவோம்.



நரியும் வெள்ளாடும்.

இங்கிலீஷ் நோட்.

1. பசியா லலைந்த நரி யொன்று
பருகுநீர் வேட்கையாற் சென்று

2. ஆழமான தோர் கிணற்றில்
தாழக் குதித்ததே சேற்றில்

3. வேண்டிய மட்டும் நீருந்தி
தாண்டி வராம லே வருந்தி

4. ஐயோ மோசம் போனேனே
இங்காரும் வரக் காணேனே (இங்)

5. எனவே வருந்தி யிருக்கையிலே—அங்
கனமே வந்ததோ ராடதுவே

6. எட்டிக் கிணற்றை நோக்கிடவே
வட்ட மிடும் நரி தோன்றிடவே

7. "அண்ணா நீரங் கிருப்பதேன்
அறைகுவீர் அறைகுவீர் தாமதமேன்"

8. என்று கேட்டதவ் வெள்ளாடு
நன்றென வேய்க்கும் மனத்தோடு

9. "ஐயா இந்நீர் இளநீரைப் போல்
இருப்பதால் குடித்தேனென் மனம்போல்

10. கிணற்றிற் குதித்துப் பாருமே
குணத்தை யறிவீர் நீருமே"


11. எனவே நரியும் கூறிடவும்—அக்
கணமே குதித்தவ் வெள்ளாடும்

12. ஆட்டின் மேலே நரி மிதித்து
மேட்டை யடைந்ததே குதித்து.

13. தந்திர முள்ள நரியாலே
நொந்தே செத்ததவ் வாடையோ.

14. இனிக்கப்பேசி யேமாற்றும்
மனித ருறவை நீரகற்றும்

15. என்றும் அன்னார் நேசமே
நன்றாய்க் கெடுக்கும் மோசமே.



சேவலும் நரியும்.

1. கொக்கரைக்கோ கொக்கரைக்கோ
கொக்கரைக்கோ வெனக் கூவியே

2. காலையினில் மாந்தரையே
கண்விழிக்கச் செய்சேவ லொன்று

3. கூரையினி லமர்ந்திருந்து
கொக்கரைக்கோவெனக் கூவிடவே

4. மெள்ள மெள்ள போனதொரு
குள்ள நரி அதைப் பார்த்து

5. "நண்பனே உன்னுடைய
பண்பான குரலினிமையினால்

6. களிப்புற்றே வந்தேன்நான்
கடுகிவருவாய் வந்தனமே"

7. என்றந்தக் குள்ள நரி
ஏய்த்ததைக் கேட்டச் சேவலுமே

8. "நன்று நன்று நண்பாயிதோ
நண்பன் நாயைக் கேட்போமே'

9. என்று சொல்லு முன்னமே
எடுத்த தோட்டம் நரியுமே.

10. ஏமாற்றும் மனிதர் சொல்லை
எள்ளளவும் நம்பலாகாதே.

வெட்டுக்கிளியும் எறும்பும்.

சங்கரனே சங்கரனே என்ற மெட்டு.

1. இரவெல்லாம் மழைபெய்ய
இரைக்காக வெட்டுக்கிளி
பரபரப்பாய்த் திரிந்தலையும்
சிற்றெறும்பு தனைநோக்கி.

2. "அருமையுள்ள நண்பனே நான்
அரும்பசியால் வருந்துகிறேன்
இரவலாகச் சிறுதான்யம்
இணங்கியே கொடுத்திடுவாய்"

3. என்றந்த வெட்டுக்கிளி
இரங்கியே கேட்கவுமே
சின்ன ஜந்து வானதொரு
சிற்றெறும்பு கூறிடுமே.

4. "வெயிலடிக்கும் காலமெல்லாம்
வீண்காலம் கழித்த நண்பா
அயலாரைக் கேட்டிடலும்
ஆகுமோ அறைகுவாயே"

5. பின்னாலே வருவதையே
பிழையின்றி ஆராய்ந்து
முன்னேசனை யோடு
முடிப்பவனே சிறந்தோனும்.

6. மழைக்காலம் வருமென்று
மதியாலே நாமறிந்து
சளைக்காமல் சேர்த்து வைத்தே
சரியாகப் புசிப்போமே.

7. சந்தோஷ மாகவே நீ
காலமெல்லாம் போக்கிவிட்டு
நொந்தே இம் மழைக்காலம்
நோயடைந்து சாவாயே."

8. என்றேயவ் எறும்பாரும்
இரக்கமின்றிக் கூறியதே.
இன்றிந்தக் கதைபடித்த
இளஞ்சிறுவர் நீங்களுமே

9. ஆராய்ந்தெக் காரியமும்
ஆகும் வழி தனைத்தேடி
சீராக முன்னாலே
செய்திடிலே சிறப்படை வீர்.

சுந்தரம் பட்டபாடு.

தந்தம் தந்தம் தனதனனு.

1. சுந்தரம் என்ற ஓர் சிறுவன்
தந்திர மாகவே திருடிடுவான்.

2. பள்ளிக் கூடம் போகாமல்
கள்ளத்தனமே செய்திடுவான்.

3. ஒருநாள் ஒருவரும் காணுமல்
பெரிய தோட்டத்துள் புகுந்து

4. மாமர மொன்றில் பழங்களையே
பறித்துப் பறித்துத் திருடுகையில்

5. தோட்டக் காரன் கண்டவனைத்
துடிக்கத் துடிக்க அடித்தான் பார்.

6. வெட்கத் தாலே தலைகுனிந்து
வேதனை மிகவும் பட்டதனுல்

7. என்றுங் களவு செய்வதில்லை
என்றே மனதி லுறுதிகொண்டு

8. பாடங்க ளெல்லாம் தவருமல்
படித்தே கெட்டிக் காரனுனன்

9. ஆதலால் நாமும் அவனைப்போல்
பாதகத் திருட்டுத் தொழில் விட்டு

10. நம்ம தல்லாச் சிறு பொருளும்
நமக்குச் சத்துரு வாகையினுல்

11. "தவிட்டை யெடுக்கு மக்கையே
தங்கத்தை யெடுக்கக் கூசாதே"

12. என்பதை மனதில் எந்நாளும்
எண்ணியே நன்மை அடைவீரே.

ஏரிகாத்த சிறுவன்.

ஆனந்தக் களிப்பு.

ஓர் கிராமத்திலோர் சிறுவன்—அவன்
தேர்ந்திடுங் குணங்கள் உடையோரி லொருவன்

ஒருநாளுந் தன்னலம் பாரான்—பையன்
பிறர்துன்பப் படுகையில் தன்மனம் தேரான்

பிறர்க்கென்றே வாழ்ந்திடும் சீலம்—கொண்டு
அருமைசேர் தொழில்பல செய்தானப் பாலன்.

பக்கத்தூர் நாடியே சென்றான்—நீர்
மிக்கதோர் ஏரியை வழியினிற் கண்டான்

கண்டனன் கசிவொன்று கரையில்—மனத்தில்
மண்டி யெரிகின்ற ஆத்திரத் தோடு

துணைநாடிச் சுற்றிலும் நோக்க—ஏரியின்
அணையினி லெவருமே அறிந்திலன் காக்க

அதிகமாய் ஜலமும் வெளியே—வர
மதியுள்ள சிறுவனும் மனத்திடங் கொண்டு

கதிரவன் மறைந்தனன் மேற்கில்—இருள்
அதிகமாய் மூழ்வதைப் பையனும் நோக்கி

ஏரியினடியினிற் சென்று—தண்ணீர்
வேருகு முடைப்பினில் முதுகினைக் கொண்டு

இரவெல்லா மூட்கார்ந்திருந்தான்—சிறுவன்
விரைத் துயிர்ப்பின்றி மனம்மிக நொந்தான்

மறுநா ளவ்வேரியை யடைந்த—ஜனங்கள்
பெரிதுமே புகழ்ந்தக் கரையினை யடைத்து

சிகிச்சைகள் பலவாகச் செய்து—பின்
மகத்தான பரிசுகள் பலபேரும் தந்து
போற்றிக் கொண்டாடினர் பாரீர்—இவனை
"வரியைக் காத்ததோர் மாவீரன் என்பார்"
ஆதலால் நண்பரே நாமும்—உலகில்
நிதில்லா வுபகாரி யாயிருப்போமே.

இரு போர் வீரர்கள்.

இங்கிலீஷ் நோட்.

லல்ல லால லால லாய் லால லால லால லாய்.

1. காட்டு மார்க்கந் தன்னிலே
 கடுமையான வெயிலிலே
 ஈட்டி கொண்ட வீரர்கள்
 இருவர் பயணம் போயினர்

2. மேற்கி லிருந்து ஒருவனும்
 கிழக்கி லிருந்து ஒருவனும்
 நோக்கி யெதிராய் வருகையில்
 நிற்கும் கல்லைக் கண்டனர்.

3. கருப்பா யிருக்கும் ஒருபுறம்
 கண்ட வீர னெதிரினில்
 இருக்கும் மற்றொருவனை
 விழித்துக் கேட்க லாயினன்:-

4. "தன்னந் கரிய சிலையுமே
 காட்டும் மார்க்கம் யாதாகும்
 என்னரிய நண்பனே நீ
 எனக்குக் கூற வேண்டுமே."

5. வெள்ளை வர்ணம் பூசிய
மற்ற புறத்தைக் கண்டவன்
துள்ளிக் குதித்துக் கோபமாய்
உத்தரமே கூறுவான்:-

6. "கொள்ளைக் கண்ண னுனக்கு
கெடுக வந்த தெவ்விதம்
வெள்ளையென்றுங் கறுப்பென்றும்
விளங்க வில்லை யோவிது."

7. முதல்வ னிதனைக் கேட்டுமே
முனிந்து மற்றோனை நோக்கியே
"இதுவு முந்தன் சேஷ்டையா
எடுப்பா யுந்த வீட்டியை."

8. "குருட்டுக் கண்ண னென்றெனைக்
குறித்துக் கூறிய படியினால்
உருட்டிக் கீழே தள்ளுவேன்
உந்தன் கர்வம் போக்குவேன்."

9. என்று கூறி இருவரும்
சண்டை செய்து சோர்வுற
சென்ற மூன்று மனிதனும்
சேர்ந்து சங்கதி யறிந்துமே.

10. "அவசரத்தால் துன்புற்ற
அரிய வீர நண்பர்காள்!
அவரவர்கள் பார்த்ததான
அந்தப் பக்கம் அந்நிறம்.

11. பொறுமையாக இருவரும்
மறு புறத்தை நோக்கிடில்
அறிந்தே இந்த உண்மையை
அகன்று போயிருப்பீரே.

12. இந்தக் கல்லின் ஒருபுறம்
கறுப்பு நிறமதாகுமே
விந்தையான மறுபுறம்
வெளுப்பு வர்ணம் தோணுமே.

13. ஆய்ந்தறியாதெதனையும்
அபிப்பிராயங் கொள்ளுதல்
ஆபத்தாக முடியுமே
அறிவீரிந்த உண்மையை."

14. என்றதனைக் கேட்டலும்
இருவருமொன்றாகவே
சென்று தங்கள் வேலையைச்
சிநேகமாக முடித்தனர்.

இருச் சொல் அலங்காரம்.

---

1. அலைகடல் கடக்கத் துணிவதேன்
அனைவரும் விரும்பிச் சேர்வதேன்
(நாவாய்கண்டு)

2. ஆடையறு படுவதேன்
ஆடவர் கனம் பெறுவதேன். (நூலேறி)

3. காவன்ன கோவன்ன ஆவதேன்
காட்டுக் குரங்கு பயர் தாடுவதேன்
(கோம்பையிட்டு)

4. கங்குல் ஓடி மறைவதேன்
காட்டில் தானிய மறுப்பதேன்.
(கதிர்வரவால்)

5. பாண்டவர் ஜெயம் பெற்றதேன்
பாலனபிமன்யூ மாண்டதேன்
(மாலையிட்டு)

6. சிதையை ராமன் பிரிந்ததேன்
சிறந்த வித்வா னுவதேன்
(கலையினுல்)

7. பெற்றோர் மனங் களிப்பதேன்
பொய்கைத் தாமரை குவிவதேன்
(பிள்ளைமதிகண்டு)

8. கிராமம் பட்டின மாவதேன்
கிறுக்கர்போ லுளறித்திரிவதேன்
(குடிமலிந்து)

விடுகதைகள்.

1. அண்ணனுக் கெட்டாது
தம்பிக்கெட்டும். அது என்ன? (கீழுதடு)

2. காயும் கோணற்காய் கொள்ளடா மைத்துன
கதையும் விடுவித்தேன் சொல்லடா மைத்துன
(காணக்காய்)

3. போவான் வருவான்
பொழுதும் ஒரு காலில்நிற்பான். (கதவு)

4. ஒருகாலிலே நாலிலைப்பந்தல். அது என்ன?
(ஆணி)

5. தண்ணீரில்லாத் தடாகத்தில்
தனியன்னம் உலாவுது
அதற்குக் காலுமில்லை. தலையுமில்லை
அது என்ன? (சந்திரன்)

6. கறுப்புச் சட்டைக்காரன்
காவலுக்குக் கெட்டிக்காரன்
அது என்ன? (பூட்டு)

7. சின்ன சிட்டுக்கு ஒருமுழவால். அது என்ன?
(அகப்பை)

8. நெடுநெடெனவே வளர்வான்
நெற்றியிலே திருநீறு பூசிடுவான்
கைதனிலே கற்பூரமேந்திடுவான்
கழுத்தகத்தே உருத்திராக்கம் பூண்டிடுவான்
கழறுவீரே இப்பொருள் யாதென்றுதானே.
(ஆமணக்கஞ்செடி)

9. வேலியில்லாத் தோட்டத்திலே
விரும்பிநடாத செடிகளிலே
பூத்துப் பொலியுமலர் என்னமலர்?
(நக்ஷத்திரம்)

10. கோடை வெயிலிலே
கொடியபாலை வனத்திலே

ஓடித்திரியு தோர்குதிரை
அதற்குக் காலுமில்லை தலையுமில்லை. (கானல்)

11. உருண்டு திரண்டிருக்கும் பந்துமல்ல
உள்ளே நாரிருக்கும் தேங்காயல்ல
சாறுண்டு கொட்டையுண்டு திராக்ஷையல்ல
சலிப்பின்றி யேதொங்கும் வௌவா லல்ல
பச்சை நிறமாயிருக்கும் பயிருமல்ல
பகுத்திதனை இன்னதெனப் பகருவீரே.
(மாம்பழம்)

12. காலே இரண்டுண்டு நிற்கமுடி யாதோடுவான்
மேலேயிருக்கும் தன் முதுகின்மீதே ஆளைச்சுமந்திடுவான்
சாலையினிற் போம்போதே சத்தம் பலவிடுவான்
பாலைநிலந்தன்னிற் போகப் பயந்திடுவானுரோசொல்.
(துவிச்சக்கரவண்டி)

13. முன்னாலே ஜலங்கொண்டேகுவான் கொட்டிவிட்டுப்
பின்னாலே சுமையின்றி மெள்ளப்போவான்
என்னேரமும் கிச்சுக்கிச்செனவே யோலமிட்டுத்
தண்ணீர் குடியாதே தரைபுரளும்பெற்றியனுன்.
இவன் யார்? (கமலை)

14. காலில்லாத பந்தல்
காணக்காண விநோதம்: இது என்ன? (வானம்)

15. குயவன் பண்ணாத பாண்டம்
வண்ணான் வெளுக்காத வெள்ளை
குடிக்கத் தண்ணீருண்டு; ஆனால்
குளிக்கத் தண்ணீரில்லை. அது என்ன?

(தேங்காய்)

நடிப்புக் கீதங்கள்.

அண்ணனும் தம்பியும்.

தம்பி:—அண்ணு! கொஞ்சம் நில்லு.

அண்ணன்:—என்னவேண்டும் சொல்லு.

த:—தந்தை கொணர்ந்த தென்னவோ?

அ:—இரண்டு மாம்பழம் தின்னவே.

த:—எடுத்து வாரு மிங்கு.

அ:—இந்தா உந்தன் பங்கு.

த:—தின்னவேண்டாம் நில்லு.

அ:—என்ன கண்டாய் சொல்லு?

த:—இரண்டை மூன்றே யாக்குவேன்.

அ:—இதனை நானும் நோக்குவேன்.

தம்பி:—(எண்ணுகிறான். இது ஒன்று. இது இரண்டு)
இரண்டும் ஒன்றும் மூன்று.

அ:—உன்சமர்த்தே வெகுநன்று
ஒன்றை நானுங் கொள்வேன்
உரிஞ்சி நன்ருய்த் தின்பேன்.

அம்மாவுக்கு ஒன்றே
அறுத்துக் கொடுப்பேன் இன்றே
மூன்றும் பழத்தை இன்றே
முறுக்காய்த்தின்பாய் நன்றே.

த:—மூடப் புத்தியால் தானே
முற்று மிழந்தேன் நானே.

பந்தயவிளையாட்டு.

வாழ்க வாழ்கவே என்ற மெட்டு.

சொர்ணகாந்தனும் கந்தசாமியும்.

சோர்—கந்தசாமியே வந்து சேருமே
பந்தயம் வைத்தாடலாம் நாமிந்தநேரமே.

கந்:—சொர்ன காந்தனே என்ன பந்தயம்
சொன்னால் நானுன்னோடுவந்து ஆடுவேனிதோ

சோர்—கண்ணை மூடியே செய்வேனோர் வித்தை
கண்ணைத்திறந்துநீ யுமதனைச் செய்யவல்லையா?

கந்:—இதற்குப்பந்தயம் என்னதருகிறாய்
மிதமாயென்னை மதித்ததாலே செய்து காட்டுவேன்.

சோர்—வெள்ளி ரூபாயில் ஒன்று பணயமே
கள்ளமின்றி வித்தைதன்னைச் செய்துகாட்டுவேன்.
(என்று சொல்லிக் கீழே உட்கார்ந்து கண்களை மூடிக்
கொண்டு மண்ணை அள்ளி அள்ளிப் போட்டுக்கொண்டு)
எங்கே பார்க்கலாம் உந்தன் திறமையை
பங்கமின்றி யென்னைப்போல்நீ செய்வாய் வித்தையை.

கந்:—சொர்னகாந்தனே தோற்றுப்போனேனே
சொன்னபந்தயம் கொடுத்தேன் என்றால் செய்யலாகாதே.

இந்த வித்தையால் என் கண்கள் போய்விடும்
சொந்தமான நண்பனே நாம் போகலாமேதான்.

———

உண்மையின் உயர்வு.

இராஜ ராஜனே என்ற மெட்டு.

சாமிநாதன். பாட்டு.

விந்தையாகவே பந்து ஆடவே
சுந்தரியே நீ சுருக்காயெடுத்துவா
இன்று விடுமுறை நாளானபடியினுல்
நன்றே யாடுவோம் நமது வீட்டினில்.

லோகசுந்தரி:

(சென்று பந்தொன்றை எடுத்துவந்து)

பாட்டு. ஷை.

இந்த மூலையில் நின்று நானுமே
எறியும் பந்தையே ஏந்திப் பிடிப்பாயே.

(சுந்தரி எறிந்த பந்தைப் பற்றிக்கொண்டு சாமிநாதன் எறிந்தான். அது சுவரில் மாட்டியிருந்த கண்ணுடியில் பட, கண்ணுடி சுக்கல் சுக்கலாய் உடைந்து போயிற்று.)

சுந்தரி:—ஐயையோ, அண்ணு! கண்ணுடி உடைந்து போயிற்றே. என்ன செய்வது? தாயார் கோபிப்பார்களே.

சாமி:—நானென்னசெய்வேன்? மெள்ளவே எறிந்தேன். தாயார் திட்டுவார்களே.இதற்கென்ன யோசனை?

சுந்தரி:—அண்ணு வா. நாம் தாயாரிடம் சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொள்வோம். நாம் சொல்லாமல் அவர்களாகப் பார்த்தால் நம்மைத் திட்டுவார்கள்.

சாமி:— பாட்டு.

ஸ்ரீ ராமச்சந்திரனே என்ற மெட்டு.

தாயாரிடமிதனை தங்கையேநீ கூறவேண்டாம்
மாயமாய் மறைத்திடுவோம் வா. வா. வா.
உனக்கேனிந்த வருத்தமே. (தாயா)

சுந்தரி:—அண்ணா, அப்படிச் சொல்லவேண்டாம்.

பாட்டு.

உண்மையை நாம் மறைக்கலாமோ
உள்ளபடி சொல்லி விட்டால்
அன்னை யொன்றும் சொல்லமாட்டார் வா. வா. வா.
உண்மையே மனத் திண்மையே. (உண்)

சாமி:—சுந்தரி, ஏனிந்தக் கஷ்டம்.

பாட்டு.

என்சாவல் போனவிடம் என்றமெட்டு.

கூறாதே விட்டு விட்டால்
குறைவுண்டோ சொல்வாய்
யாரோ உடைத்ததென்று
அன்னை எண்ணிக்கொள்வார்.

சுந்தரி.

இதுதானோ நல்லதென
எண்ணிப்பார்ப்பா யண்ணா!
மதியுடைநம் ஆசானுரை
மறந்தனையோ சொல்வாய்.

சாமி:—நீ எப்படியாவது போய்ச்சொல்லி அடிபெறு. நான் வந்து உடைத்துவிட்டேன் என்று சொல்லவே மாட்டேன்.

(இவர்கள் சம்பாஷணையை மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த தாயார் உள்ளேவந்து)

தாயார்:—கண்மணிகளே! என்ன சச்சரவிடுகின்றீர்கள்?

சுந்தரி:—தன் தாயார் முன் பயத்தோடு ஓடிவந்து.

பாட்டு.

பாராயோ என்னைமுகம் என்றமெட்டு.

அம்மா நாங்கள் பந்துதனை
ஆடிக்கொண்டே இருந்தோம்
செம்மையான கண்ணாடியும்
பந்துபட் டுடைந்ததுவே.
அறியாமற் செய்தபிழை
அன்னையே மன்னிப்பீரே
சரியாக நடந்தினிமேல்
சந்தோஷங் கொடுத்திடுவோம்.

தாயார்:—

கண்மணியே சுந்தரியே
கண்ணாடி யுடைந்தாலும்
உண்மைநீ யுரைத்ததினால்
உன்னைநான் மெச்சுகிறேன்
உண்மையே உயர்வைத்தரும்
என்றதனை மறவாது
உண்மையே புகலுவது
உத்தமமாகு மம்மா.

வசனம்.

கண்ணே! கண்ணாடிபோனாற் போகிறது. வேறொன்று இன்றே வாங்கித்தருகிறேன். உண்மை உரைத்ததேபோது

மானது. இந்தா இந்தப்பணத்தையும் வைத்துக்கொள். உன் அண்ணனுக்கு ஒன்றுங் கொடுக்கமாட்டேன். அவன் பொய் பேசுகிறவன். இதைமறந்து விடாமல் நடந்துகொள்.

சீனுவும் இராமனும்.

திருட்டுக்கை நில்லாது.

(சீனுவும் ராமனும் பாடசாலைக்குப் போகிறார்கள். வழியில் அழகாகப் பூத்துக்காய்த்துள்ள ஒரு மாந்தோட்ட முண்டு. அந்தத்தோட்டத்திலுள்ள மாமரத்தைப் பார்த்து)

பாட்டு.

சீனு:-நண்பா அம்மரத்தே
நல்லபழங்களைப்பார்
தின்றே பசியாறித்
திரும்பிப்போகலாம்வா

ராமன்:-ஏனேவுனக் கிந்தமதி
இந்தப் பழங்களைநாம்
காணாமலே பறித்தால்
களவுதா னாகாதோ?

சீனு:-எத்தனையோ பழங்கள்
இந்தமரத் திருக்க
பத்தைப் பறித்துக்கொண்டால்
பார்ப்பவ ராரேசொல்.

ஸ்ரீராமச்சந்திரனே என்றமெட்டு.

ராமன்:-நமக்கொன்றும் சொந்த மில்லாப்
பிறர்பொருளைக் கவருவதால்
நாம் திருடராகோமோ சொல், சொல், சொல்.
வேண்டாமே பழம் வேண்டாமே (நம)

சீனு:-திருடரெனச் சொல்லலாமா
யார்பணத்தைத் திருடினேம்நாம்
அருமையுள்ள நேசனேநீ சொல், சொல், சொல்.
ஏனோ இப்படிக் கூறுகிறாய் (திரு)

தன்னனனனன என்ற மெட்டு.

ராமன்:-நமக்குச் சொந்தமல்லாத
துரும்பைத்தானுங் கொள்வதால்
நாம் திருடரென்றுமே
நன்றாய்மனத்திற் கொள்ளுவாய்.

மேலும்

தவிட்டை எடுக்குமக்கையே
தனத்தை எடுக்குமிதுமெய்யே
பாடசாலைக் கேகவே
நேரமதிக மாகுதே (நமக்)

(போய்விட்டார்கள்) அதன்மேல் தனியாகச் சீனு வந்து மாம்பழங்களைப் பறித்துப்போனான். அன்றுமுதல் அனேகமான திருட்டுகளைச்செய்து பழகிவிட்டான். ஒரு நாள் ஒரு கனவான் தம் சட்டையைக் கழற்றிவைத்து விட்டுக் குளிக்கப்போனதைப் பார்த்த சீனு அதிலுள்ள பொன்கடிகாரத்தைத் திருடினான். தற்செயலாய் அங்கு வந்த தாணுக்காரனொருவன் அதைக்கண்டு சீனுவை அடித்துத் தாணுவுக்குக் கொண்டுசெல்லும்பொழுது ராமனைக் கண்டான். கண்டதும் வெட்கத்தால் தலை குனிந்தான்.

பாட்டு.

ஆனந்தக்களிப்பு மெட்டு.

ராம:-சீனுவே இதுவென்னகோலம்—இப்படித்
தானுவிற்கேகவோ வந்ததுன்காலம்
செய்ததோர் குற்றந்தானென்ன—உந்தன்
கைதனில் விலங்கேறக் காரணமென்ன?

வெட்கத்தோடு.

சீனு:-அருமைசேர் நண்பனே நீதான்—அன்று
அறைந்தவை கேளாத பெரும்பயனிதுதான்
மாம்பழம் திருடிநான் தின்றேன்—பின்பு
மாளுமல்களவுகள் பலபல செய்தேன்
பலநாளாய்க் களவுசெய் திருடன்—பின்பு
ஒருநா ளகப்படத் துன்பமேயடைவான்
என்பதை எண்ணாததாலே—இந்தத்
துன்பப்படுகின்றே னறியாமையாலே. (அரு)

அசுத்தமான பையன்

பாராயோ என்னைமுகம் என்றமெட்டு.
(பெரியவர் அசுத்தமான பையனைப் பார்த்து)

அப்பனே தோட்டத்திலுன்
அண்ணனுங் காத்திருக்கான்
இப்பவே ஓடிப்பார்த்தால்
இன்பமா யழைத்திடுவான்.

பையன்.

ஒருவரும் என்னுடனே
ஒப்பிச் சேராததாலே

அருகிலுள்ள தோட்டத்தில்போய்
அண்ணனைப் பார்த்திடுவேன்.

(போகிறான்) ஒருவரையும் தோட்டத்தில் காணோமே! என்னைக்காண்பதற்காக என் அண்ணனொருவன் காத்திருப்ப தாகப்பெரியவர் சொன்னார். உண்மையில் எனக்குச் சகோ தரர் ஒருவருமில்லை. இருப்பினும், என்னோடு சேர்ந்து ஒரு வரும் விளையாட வாராதபடியால், இப்படியாவது பொழுது போக்கலாம் என்று வந்தேன். ஒருவரையும் காணவில்லை. அதோ புறா வருகிறது. அதுதானோவென்று கேட்கிறேன்.

ஸ்ரீராமச்சந்திரனே என்றமெட்டு.

ஆடி ஆடி மேய்ந்துவரும்
அழகமைந்த புறாவரசே
நீதானோ என்னண்ணன் சொல், சொல், சொல்.
பெரியவர் இன்று கூறினார். (ஆடி)

புறா.

மேனியெங்கும் மாசுகொண்டு
முகத்திலெங்கும் புழுதிகண்டு
அசுத்தமா யிருக்கும்பையா செல், செல், செல்.
நானுமுன் அண்ண னல்லவே (மேனி)

பையன்:—புறாவும் என்னை விரும்பிச்சேர்க்கவில்லை. பின் என் அண்ணன்யார்? அதோ ஓர் அணில் வருகிறது, அதனிடத்திற்சென்று அதைக் கேட்டுப் பார்ப்போம்.

அம்பலத்தரசே என்றமெட்டு.

அங்கு மிங்கும் ஓடிவிளை
யாடிக் களிக்கும் பொன்னணிலே

இங்கே இருக்கும் என் அண்ணன்
நீதானே நின்று கூறிடுவாய் (அங்)

அணில்.

அசுத்தமுள்ள பையனே நான்
அண்ணனல்ல தம்பி யல்ல
பசிக்கே கொட்டையைக் கடிப்பேனே
பயந்தே உன்னொடு சேரேனே. (அசு)

பையன்:—ஐயோ அற்பப்பிராணியாகிய அணிலுங் கூட என்னைக் கண்டு பயப்படுகிறதே. என்னசெய்வேன்? அதோ ஒரு காகம்வருகிறது. அதுதானேவென்று அதனிடத்திற் சென்று கேட்டுப்பார்க்கிறேன்.

என்சாவல் போனவிடம் என்றமெட்டு.

கத்திக் கத்திக் கரையும்நல்ல
காகமே நீதானே
சுத்தமுள்ள என் அண்ணன்
கூறிடுவா யெனக்கே

காகம்.

அசுத்தமுள்ள பையனேநான்
மாலையினில் குளிப்பேன்
அசுத்தமாக இருக்குமுன்னைத்
தம்பியாகக் கொள்ளேன்.

பையன்:-இதுவும் என்னோடு சேமாட்டேனென்கிறது. சரி. இனி எங்கு போகலாம்! வீட்டுக்குப்போவோம்.

(அப்பொழுது ஒரு பன்றி உறுமிக்கொண்டு அங்கு வந்தது. அதைக்கண்ட பையன் அப்பாற் போகப்பார்த்தான். அப்பொழுது அப்பன்றி தானே அவனருகில்வந்து.)

பித்தா பிறை சூடி என்ற மெட்டு.

பன்றி:—வாடா என் தம்பி—சேற்றில்
வாகாய்ப்புரண்டிடலாம்
சூடாயிருப்பதாலே—இது
சுகமாமோடிவாராய். (வாடா)

பையன்:—ஐயோ தெய்வமே—நான்
அசுத்தமா யிருப்பதாலே
மெய்யா யிந்தப்பன்றி—என்னை
மேவியழைக்கிறதே. (ஐயோ)

என்சாவல் என்ற மெட்டு.

இனிமேலே நான் தினமும்
குளித்துச் சுத்தமாக
புனிதமுள்ள வஸ்திரத்தைப்
போற்றியுடுத்தி வருவேன்
அசுத்தங்களைப் போக்கியேநான்
அழுக்கையகற்றி விடுவேன்.
அசுத்தப்பைய னென்னும்பெயர்
அடையே னொருநாளும்.

வசனம்.

இப்பொழுதுதான் என்க்குப் புத்தி வந்தது. புறா, அணில் காகம், இவைகள் சுத்தமாயிருப்பதால் என்னை விரும்பவில்லை. அசுத்தமுள்ள பன்றி நான் விரும்பாமலே என்னோடு சேர வருகின்றது. பெரியவர் கருத்தும் இதுவே போலும். இது முதல் நான் சுத்தமாயிருக்கப் பிரயாசைப் படுவேன், நன்றாகவும் படித்துக்கொள்வேன்.

ஆபத்திலுதவாத நேசன்.

கோவிந்தனும் கேசவனும்.

பாட்டு.

சாமி வடிவேல் முருகநாதா என்ற மெட்டு.

கோ:-நாமிருவர் ஒன்றுகூடிப் போவோம் வாராய்
நன்னயமாம் காட்சிகளைக் காண்போம் சீராய் (நா)

பல்பொருளும் விளையுமலைக் குன்றுகுன்று—நாம்
பகற்பொழுதைக் கழிப்போமங்கு சென்றுசென்று (நா)

நதிகளையுஞ் சுனைகளையுங் கண்டுகண்டு—களித்து
நலம்பெறவே கட்டமுது கொண்டுகொண்டு (நா)

தென்றல் காற்று வீசும் மலர்ச் சோலை சோலை—அதில்
தேனருவி பாயும் அதி காலை காலை

அன்றில்அன்னம் மயில்குயில்கள் ஆடும்பாடும்—மிக்க
ஆனந்தமே மனதில்வந்து நாடும் நாடும் (நா)

வசனம்.

நேசனே! புறப்படு; சீக்கிரம் போவோம். நேரமாகின்றது. இன்று அஸ்தமனத்திற்குள் வீடு திரும்பிவிட வேண்டும். நல்ல கட்டமுதும் கொண்டுவந்திருக்கிறேன். அங்கு சென்று ஆனந்தமாக இருந்து பலவளங்களையும் பார்த்துவிட்டுக் கட்டமுதருந்தி சாயங்காலமாக வீட்டுக்குவரலாம். இன்றுதான் நமக்குப் பள்ளிக்கூட லீவுநாளாயிற்றே!

கேசவன்.

பாட்டு. ஷ

வருவதற்குத் தடையுமுண்டோ நண்பா நண்பா—அங்குப்
பருவங்களின் மாறுபாட்டைக் காண்பாம் காண்பாம் (வரு)

புள்ளினத் தீங்குரலின் பாட்டு பாட்டு—நாம்
புதுமையுடன் செவியாரக் கேட்டு கேட்டு (வரு)

ஆனந்தம் மிகவுமடைவோமே நாமே—சென்று
அந்திக்குள்ளே திரும்பி வீடுசேரலாமே (வரு)

வசனம்.

ஆகா, இதோ புறப்பட்டுவிட்டேன். வா, போகலாம். (ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டே போகிறார்கள்.)

கோவிந்தன்.

பாட்டு.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே" என்ற மெட்டு.

வழிநெடுகவே தோன்றிடும் புஷ்பங்கள்
விழிகளுக்கானந்த மாக்குதுபார்
மழைவிழுந்ததால் மானிலப் பூண்டுகள்
தழைவிரித்தோங்குவ தானந்தமே.

கேசவன்.

தீங்கனிதந்திடும் மாமரச் சோலைகள்—ஆங்
கோங்கி வளர்ந்திடுங் காட்சியைக்காண்
தேங்குஞ் ஜலத்தினில் தோன்றுஞ் செந்தாமரை
மாமலர்கண்டு களித்திடுவோம்.

வசனம்.

நண்பனே! இங்குள்ள காட்சிகளையெல்லாம் பார்க்கப் பார்க்கப் பொழுதுபோவதும் தெரியவில்லை. நம்மை யறியாமலே வெகுதூரம் வந்திருக்கின்றோம். இதுவரை இங்கு வராமலே காலம்போக்கி இருந்திருக்கின்றோமே?

கோவி:-நேசனே! ஐயையோ, அங்கேபார் நம்மை நோக்கி ஒரு கரடி வந்துகொண்டிருக்கிறதே! என் செய்வோம்? இந்தச் சமயத்தில் தைரியத்தைக் கைவிடலாகாது. நாமிருவரும் இக்கரடியை எதிர்த்துச் சண்டை செய்வோம்.

கேச:-அது முடியாது. நாம் எதிர்த்தால் நம்மைக் கொன்றுவிடும். எனக்கோ மரமேறத் தெரியும். ஆகையினால்,

பாட்டு.

ஸ்ரீராமச்சந்திரனே என்ற மெட்டு.

நேராக நானேடி வேருக மாமேறுவேன்
போராடேன் கரடியொடு போ. போ. போ.
எதிர்த்திட நானும் மாட்டேனே— (நே)

கோவிந்தன்.

ஐயையோ மோசம்போனேன் ஆருந்துணையில்லையே
பையனுமோடிவிட்டான் பார். பார். பார்.
ஆகுதே மூர்ச்சை ஆகுதே— (ஐயை)

(மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்துவிடுகிறான். செத்தவன்போலிருப்பதால் கரடிவந்து பார்த்துவிட்டுப், பிணத்தை உண்ணுதாகையால் அது தன்பாட்டில் போய்விட்டது.)

கேச:-(மரத்திலிருந்து கீழிறங்கி வந்து)

பாட்டு.

பாராயோ என்னைமுகம் என்ற மெட்டு.

நேசனே காடிவந்து நின்பாலுரைத்ததென்ன
கூசாமல் வாய்திறந்து கூறிடுவாயெனக்கே.

கோவிந்தன்.

ஆபத்தி லுதவாதாரை அன்பனே நம்பாதேயென்று
கூறியே சென்றதப்பா குணமுள்ள வக்காடி.

(கேசவன் வெட்கித் தலைகுனிகின்றான். கோவிந்தன் அவனது நயவஞ்சகத் தனத்தை அறிந்தவனாக இருவரும் அவரவர் வீடுநோக்கிப் போகின்றார்கள்.)

கதையின் நீதி.

நொண்டிச் சிந்து.

ஆதலால் சிறுவர்களே—நாமும்
ஆபத்தினி லுதவாத அற்பர்களை
நேசிக்கலாகாதே—அவர்களை
நினைப்பினுங் கொடிய பாபமாமே.
நம்பவைத்துக் கழுத்தறுப்பார்—அவரை
நம்பிடிலோமிகப் பெருந் தீங்குண்டாம்.
நயவஞ்சகரோடு—சேராமல்
நல்லவருடனே கூடி நன்மை புரிந்து
கல்வியில் ஊக்கம் வைத்து—படித்துக்
கண்யமான பிள்ளை என்று பெயரெடுப்பீர்.

———

பள்ளித் தலைவர் இன்ஸ்பெக்டரிவர்களை வரவேற்கும் கீதம்.

முத்திநெறி யறியாத என்ற மெட்டு.

1. பொங்கிடும்நல் மங்களமே புகழாகத் தங்கிடும்
எங்களைப் பரீட்சைசெய்யும் இன்ஸ்பெக்டரெஜமானரே
கங்குலைப் போக்கவரும் கதிர்சூழும் சூரியன்போல்
எங்களுக்கு உயர்ஞானம் உதவிடவே வாரீரே (பொ)

2. உலகெங்கும் வியாபிக்கும் ஒருவனது தன்னருளால்
பலகலையும் எங்களிடைப் பரவிடவே உதவிசெய்ய
கலைகள்பதி ஞன்குடைய கவின்மதியத்தருள்படைத்த
இலகுறுமெம் இன்ஸ்பெக்ட ரெஜமானர் வருகவே. ()

3. மாவோங்கும் மகஜனங்கள் மதித்தேமிர் மானித்த
பாவோங்கும் பாடசாலை பாலிகா பாலியர்கள்
நாவோங்கு மெங்கள்நல் லாசிரியர் தம்மோடு
கூவியேயழைக்கின்ருேம் குணக்கடலேவாரீரே. (பொ)

அனுபந்தம். I.

பழமொழிகள்.

1. அகதிக்குத் தெய்வமேதுணை.
2. ஆசை ரோசமறியாது.
3. இளமையிற்சோம்பல் முதுமையில்மிடிமை.
4. ஈனரை அடுத்தால் மானம் அழியும்.
5. உண்மைசொல்லிக் கெட்டாருமில்லை;
பொய்சொல்லி வாழ்ந்தாருமில்லை.

6. ஊர்இரண்டுபட்டால் கூத்தாடிக்கெளிது.
7. எண்இல்லாதவன் கண்இல்லாதவன்;
எழுத்தில்லாதவன் கழுத்தில்லாதவன்.
8. ஏழையென்றால் மோழையும்பாயும்.
9. ஐந்தில் வளையாதது ஐம்பதில்வளையுமா?
10. ஒருபானை சோற்றுக்கு ஒருசோறுபதம்.
11. ஒட்டைச்சட்டியானாலுங்கொழுக்கட்டைவெந்தாற்சரி.
12. ஔவைவாக்கே அமுதவாக்கு.
13. கடன்பட்டையோ கடைகெட்டையோ.
14. சண்டியிரண்டால் காடுகொள்ளாது; மேடுகொள்ளாது.
15. ஞானமுங் கல்வியும் நாழியரிசியிலே.
16. தண்ணீரிலிறந்தாரிலும் சாராயத்திலிறந்தார் மிகுதி
17. நற்குணமே நல்ல ஆஸ்தி.
18. பசி ருசியறியாது.
19. மட்டானபோஜனம் மனதுக்குமகிழ்ச்சி.
20. யதார்த்தவாதி வெகுஜனவிரோதி
21. வருந்தினால் வாராதது ஒன்றுமில்லை.
22. அதிக ஆசை அதிக நஷ்டம்.
23. அஞ்சனக்காரன் முதுகில் வஞ்சனைக்காரன் ஏறினான்.
24. அண்ணன்வரும்வரை அமாவாசைகாத்திருக்குமா?
25. அறையிலாடியல்லவோ அம்பலத்திலாடவேண்டும்.
26. ஆபத்திலறியலாம் அருமை நேசனை.
27. ஆடையில்லாதவன் அரைமனிதன்.
28. ஆற்றிலேபோட்டாலும் அளந்துபோடு.
29. இடுவதுபிக்ஷை பெறுவதுமோக்ஷம்.
30. இரவற்சேலையைநம்பி இருக்குங்கந்தையை எறியாதே.
31. இன்றைக்கு இலையறுத்தவன்
நாளைக்குக் குலையறுப்பான்.

32. உடையவன்பாராதவேலை ஒருமுழங்கட்டை.
33. உப்பிட்டவரை உள்ளளவும்நினை.
34. எத்தால்வாழலாம் ஒத்தால்வாழலாம்.
35. எறும்பு ஊரக் கல்லுந்தேயும்.
36. எற்றமுண்டானல் இரக்கமுண்டு.
37. ஒய்யாரக்கொண்டையாம் தாழம்பூவாம்
உள்ளே இருக்குமாம் ஈரும்பேனும்.
38. ஒருபொய்யை மறைக்க ஒன்பது பொய்வேண்டும்.
39. கடுங்காற்றுமழைகாட்டும்; கடுநட்புப்பகைகாட்டும்.
40. கருமத்தைமுடிக்கிறவன் கஷ்டத்தைப்பாரான்.
41. கண்கெட்டபிறகு சூரியநமஸ்காரம் ஏன்?
42. கனத்தால் இனமாகும்; பணத்தால் ஜனமாகும்.
43. காணிச்சோம்பல் கோடிநஷ்டம்.
44. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
45. குற்றமுள்ளநெஞ்சு குறுகுறுக்கும்.
46. கெட்டிக்காரன் புழுகு எட்டுநாளில்தெரியும்.
47. கூரையேறிக் குருவி பிடிக்காத குருக்களா
நானை வானத்தைக் கிறி வழிகாட்டுவார்?
48. கைக்கெட்டியது வாய்க் கெட்டவில்லை.
49. கோணிக் கோடி கொடுப்பதிலும்
கோணுமற்காணி கொடுபதுமேல்.
50. சிறுதுரும்பும் பற்குத்தஉதவும்.
51. சின்னப்பாம்பானலும் பெரியதடிகொண்டடி.
52. செய்தவினை செய்தவர்க்கெய்திடும்.
53. சொல்லிக் கொடுத்த சொல்லும் கட்டிக்கொடுத்த
சோறும் எதுவரையில் நிற்கும்?
54. தன்னை அறிந்தால் தலைவனையறியலாம்.
55. தாழ்ந்துநிற்பார் வாழ்ந்துநிற்பார்.

அனுபந்தம். II.

மாணவர்கள்.

மனனஞ்செய்தற் கேற்றதான சில

செய்யுள் திரட்டு.

(பல நூல்களிலிருந்தும் திரட்டியன.)

கடவுள் ஸ்தோத்திரப் பாக்கள்.

விநாயகர்.

1. பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத்தமிழ் மூன்றுந் தா.

2. விநாயகனே வெவ்வினையை வேர் அறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கசிந்து.

3. திங்களங்கொழுந்து வேய்ந்த
செஞ்சடைக் கொழுந்தே போற்றி.
மங்கை வல்லபைக்கு வாய்ந்த
மகிணநின் மலர்த்தாள் போற்றி.
ஐங்கர நால்வாய் முக்கண் அருட்சிவகளிறே போற்றி.
கங்கையாள் மகிழுஞ் செல்வக்
கணேசநின் கழல்கள் போற்றி.

4. சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகிலாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளிமார்பும்
அற்புதம் நிறைந்த கற்பகக்களிறே!
தத்துவநிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

5. சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதிசெயச்
சுத்தியாகிய சொற்பொருள் நல்குவ
சித்தியானையின் செய்ய பொற்பாதமே.

6. நல்ல சொற்பொருள் நாளும் நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லு மானைமுகத்தினை மேவிவாழ்
வல்ல பைக்குரி யானை வழுத்துவாம்.

சரஸ்வதி.

1. ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கு மென்னம்மை—தூய

உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

2. படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோல் கையும்—துடியிடையும்
அல்லும்பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

3. வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென்
வெள்ளை யுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
ஜகமேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்தாக
உண்டாக்கு வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலா வல்லியே.

4. புத்தகம் செபவடம் புனித ஞானமா
முத்திரை குண்டிகை முழுதும் ஏந்தெழில்
கைத்தலத்தமர்தினைக் கலைமடந்தையை
முத்தமிழ்க் கிழத்தியை முடிவணங்குவாம்.

5. புத்தகத் துள்ளுறை மாதே
பூவில் அமர்ந்துறை வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக்கிறைவி
முத்தின் குடையுடையாளே
மூவுலகும் தொழு தேவி
செப்புங் கலையின் வடிவே
செவ்வரியோடிய கண்ணாய்
முத்துநிறைத்தவெண் பல்லாய்
முருக்கம்பூ மேனி நிறத்தாளே

தக்கோலங்நின்ற தவர்வாயாய்
சரஸ்வதி யென்னுந் திருவே
எக்காலுமுன்னைத் தொழுவோம்
எழுத்தறிபுத்தி பண்ணுவிப்பாய்
ஆக்கா எம்பெருமாட்டி
அழகிய பூவணை மீதாய்
சாலி அரிசி கொண்டு
சரஸ்வதி பூசைபண்ணிப்
பாலொடுபழத்தை நிரப்பிப்
பாவித்தொழுவோம் நங்காய்
நங்காய் நங்காய் நமஸ்து
ஞானக் கொழுந்தே நமஸ்து
கல்விக்கரசே நமஸ்து
கணக்கறிதேவி நமஸ்து
சொல்லும் பொருளே நமஸ்து
சூக்கும ரூபி நமஸ்து.

முருகன்.

1. முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

2. மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
எவரும் துதிக்கநின்ற
ஈராறு தோள்போற்றி காஞ்சி
மாவடி வைக்கும் செவ்வேள்
மலர் அடிபோற்றி அன்னன்
சேவலும் மயிலும்போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி.

3. ஏறுமயி லேறிவிளையாடு முகமொன்றே;
ஈசனொடு ஞானமொழி பேசுமுகமொன்றே;
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே;
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகமொன்றே;
மாறுபடுசூரரை வதைத்தமுக மொன்றே;
வள்ளியை மணம்புரிய வந்தமுக மொன்றே;
ஆறுமுகமானபொருள் நீயருளல்வேண்டும்;
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே.

4. முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகும் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங்கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ வெண் குண பஞ்சரனே.

சிவபிரான்.

1. உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அமபலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

2. மாற்றறியாத செழும் பசும்பொன்னே
மாணிக்கமே சுடர்வண்ணக் கொழுந்தே!
கூற்றறியாத பெருந்தவ ருள்ளக்
கோயிலிருந்த குணப்பெருங் குன்றே!
வேற்றறியாத சிற்றம்பலக் கனியே
விச்சையில் வல்லவர் மெச்சும் விருந்தே!
சாற்றறியாத என் சாற்றுங் களித்தாய்
தனிநடராஜ! என் சற்குருமணியே.

3. தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்தேத்தவருள் செய்த
பீடுடையபிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே.

4. கல்லார்க்குங் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பே
காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவமே
என்னரசே யான்புகலும் இசையுமணிந் தருளே.

6. அம்பலத்தரசே அருமருந்தே
ஆனந்தத் தேனே அருள்விருந்தே
பொதுநடத்தரசே புண்ணியனே
புலவரெலாம் புகழ் கண்ணியனே
மலைதருமகளே மடமயிலே
மதிமுகஅமுதே இளங்குயிலே
ஆனந்தக்கொடியே இளம்பிடியே
அற்புதத்தேனே மலைமானே
சிவ சிவ சிவ சிவ சின்மயதேஜா
சிவ சுந்தர குஞ்சித நடராஜா
படனவிவேகா பரம்பர வேதா
நடன சபேச சிதம்பர நாதா
சகள உபகள நிட்கள நாதா
உகள சததள மங்கள பாதா

அந்தண வந்தண அம்பர போகா
அம்பலநம்பர அம்பிகை பாகா
அம்ப விம்ப சிதம்பர நாதா
அஞ்சித ரஞ்சித குஞ்சித பாதா
தந்திர மந்திர யந்திர பாதா
சங்கர சங்கர சங்கர நாதா.

உமாதேவியார்.

திருவே திகழுங் கலைமகளே திருவே மலையான் திருமகளே
உருவே இச்சைமயமே மெய்யுணர்வின்வனமே உயரின்பக்
குருவே ஆதித்தனித்தாயே குலவும்பரையாம் பெருந்தாயே
மருவே மலரே சிவகாம வல்லி மணியே வந்தருளே.

திருமால்.

1. அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக்கண்ணனை
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி யேத்துவாம்.

2. வானாகி மண்ணாகி வளியாகி வெளியாகி
ஊனாகி உயிராகி யுண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே.

3. பாயிருபரவை தன்னுள் பருவரை திரித்துவானோர்க்
காயிருந் தமுதங்கொண்ட அப்பனை எம் பிரானை
வேயிருஞ் சோலை சூழ்ந்து விரிகதிர் இரியநின்ற
மாயிருஞ்சோலை மேய மைந்தனை வணங்கினேனே.

திருமகள்.

1. செந்தா மரைமலரில் சேர்ந்திருக்கும் அன்னமே
எந்தாயே கண்ணே எழில்முன்பு—வந்தார்க்கு
வாழ்வும் பெருந்திருவும் வண்மையொடு கல்விவரும்
தாழ்வும் வருமோ தனி.

2. எங்கெங்கே நல்லழகும் எத்தும் பெருஞ்சிறப்பும்
அங்கங்கே நீயே அமர்ந்துறைவாய்—செங்கமலத்
தேனே திருவே தெவிட்டாத தெள்ளமுதே
நானே மகிழவருள் நல்கு.

பொது.

1. தனித்தனி முக்கனிபிழிந்து வடித்தொன்றாய்க்கூட்டி
சர்க்கரையும் கற்கண்டும் பொடியு மிகக் கலந்தே
தனித்த நறுந்தேன்பெய்து பசும் பாலுந்தெங்கின்
தனிப்பாலும் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே இளஞ் சூட்டிலிறக்கி
எடுத்த சுவைக்கட்டியினும் இனித்திடு தெள்ளமுதே
அநித்த மறத் திருப்பொதுவில் விளங்கும் நடத்தரசே
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கலணிந்தருளே

2. ஒருமையுடன் நினதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்மொன்று பேசுவார்
உறவுகலவாமை வேண்டும்
பெருமை பெறு நினதுபுகழ்பேசவேண்டும் பொய்மை
பேசாதிருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுகவேண்டும் மதமானபேய்
பிடியாதிருக்கவேண்டும்

மருவு பெண் ணாசையை மறக்கவே வேண்டும் உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின் கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில் நான் வாழவேண்டும்
தரும மிகு சென்னையிற் கந்த கோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

3. அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமய கோடிகளெல்லாம்
தந்தெய்வம் எந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளதெது மேல்
கங்குல் பகலற நின்ற எல்லையுளதெது அது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டனவெலா மோன உருவெளிய தாகவும்
கருதி யஞ்சலி செய்குவாம்.

4. எவ்வுயிரு மென்னுயிர்போல் எண்ணி இரங்கவு நின்
தெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே.

அன்பைப் பெருக்கியென தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே.
பக்த சித்தர் வாழி பரி பக்குவர்கள் வாழி செங்கோல்
வைத்தவர்கள் வாழி குருவாழி பராபரமே.

தமிழ்.

1. கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக் கிடந்ததா யெண்ணவும் படுமோ.

2. தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும் என்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்.

3. வடமொழியைப் பாணினிக்கு வருத்தருளி
அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாம்
தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்
பாகரெனில்
கடல்வரைப்பின் இதன்பெருமை யாவரே
கணித் தறிவர்.

4. காசியினின்றும் போந்து கம்பர்தா ம்ருளப்பெற்று
மாசிலாக் கச்சிமூதூர் மன்னிவீற்றிருந்து பூமேல்
ஆசிலாத் தமிழ்பரப்பி அருந்தமிழ்க் குறவு பூண்ட
தேசிகன் மலயவெற்பிற் குறு முனி திருத்தாள்போற்றி.

முற்றும்.

Copies can be had of :-

E. M. Gopalakrishna Kone,

Educational Publisher,

"SRI GOPAL MAHAL,"

North Chitrai Street, Madura.

Branches:—

PUDUMANDAPAM, MADURA.

161, BROADWAY, MADRAS.